<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>தானியங்கி சொட்டு நீர் பாசனம் மேற்கொள்ள</u>

<u>வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை</u>

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தானியங்கி சொட்டு நீர் பாசன அமைப்பினை பயன்படுத்தி நீர் பாசனத்தை குறைந்த மனித ஆற்றலுடன் மேற்கொள்ளலாம் என வேளாண்மை இணை இயக்குநர் திரு. மா. பெரியசாமி அவர்களின் ஆலோசனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

தானியங்கி சொட்டு நீர் பாசனம் என்பது நேரம் காப்பகம் (timer) உணரிகள் (Sensors), கணினி போன்ற இயந்திரம் உள்ளிட்ட அமைப்புகளுடன் மிகக் குறைந்த மனித ஈடுபாட்டுடன் நீர் பாசனம் மேற்கொள்வதாகும். இத்தொழில்நுட்பம் மூலம், தண்ணீர் மற்றும் வேலையாள் பற்றாக்குறை உள்ள சூழலில் துல்லிய நீர் பாசனத்திற்கு உதவுகிறது. மேலும் பாசன நீர் உபயோகத்திறனை அதிகப்படுத்துகிறது.

<u>செயல்படும் முறை:</u>

- மண்ணில் உள்ள ஈரப்பதம், மண் ஈரப்பதம் உணரிகள் மூலம் நிமிடத்திற்கு நிமிடம் கண்காணிக்கப்படுகிறது.
- மண் ஈரப்பத உணரிகளின் தரவுகள் மைக்ரோ கண்ட்ரோலர் அலகுக்கு செலுத்தப்பட்டு, அதில் கணினி இயங்கும் விதம் மாற்றப்படுகிறது.
- அத்தரவுகள் ப்ளுடூத் அல்லது வை-பை (Wifi) போன்ற தொழில்நுட்ப கம்பியில்லா கடத்தியின் உதவியுடன் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்படுகிறது.
- இத்தரவுகளின்படி மண்ணின் ஈரப்பதம் குறைவான நிலையை எட்டும்பொழுது சொலினாய்டு வால்வு மூலம் பாசன நீர் குழாய் திறக்கப்பட்டு பயிர்களுக்கு தானாகவே நீர்பாசனம் செய்யப்படுகிறது.
- இப்பணிகளை வேறு இடத்திலிருந்து கைபேசி மூலம் கண்காணிக்கும் வசதியும் உள்ளது.

<u>சொட்டு நீர் பாசனத்தை தானியங்கியாக மாற்றுவதன் பயன்கள் :</u>

- துல்லிய நீர்பாசனம் மண்ணின் ஈரப்பதம் மற்றும் காலநிலையை பொருத்து பயிர் தேவைக்கு ஏற்ப துள்ளியமாக நீர் பாசனம் செய்யப்படுகிறது. இதனால் அதிக பாசனநீர் விரையமாகுதல் தடுக்கப்படுகிறது.
- இடுபொருட்கள் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கிறது.
- வேலை ஆட்கள் தேவையும் குறைகிறது.
- தேவையான நீர் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவை சரியான தருணத்தில் கிடைப்பதனால் மகசூல் அதிகரிக்கிறது.
- குறைவான பாசன நீர் உபயோகிப்பு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மேலாண்மையால் சுற்றுப்புற சூழல் பாதுகாக்கப்படுகிறது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் மிகக் குறைந்த மனித ஆற்றலுடன் இயங்கும் தானியங்கி சொட்டு நீர் பாசனம் அமைப்பினை பயன்படுத்துவது மூலம் நீர் சிக்கனம் மற்றும் அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் திரு. மா. பெரியசாமி அவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளார்

ஒம்/- மா. பெரியசாமி,
வேளாண்மை இணை இயக்குநர்,
புதுக்கோட்டை.